தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 23-9-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## அறுவடையான சோளத்தை உடனே விற்கவும்

சோளம், உலகளவில் கோதுமை, நெல், மக்காச்சோளம் மற்றும் பார்லிக்கு அடுத்தப்படியாக ஐந்தாவது முக்கிய தானியப் பயிராகும். மானவாரிப் பயிர்களில் இவை முக்கிய உணவு பொருளாக ஆசியா மற்றும் ஆப்பிரிக்கா கண்டங்களில் உள்ளது. இது கால்நடைகளுக்கு தீவனம் மற்றும் தீவனப்பயிராகவும், மாவுப்பொருள் மற்றும் பிஸ்கட் தயாரிப்பில் மூலப்பொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது. மொத்த சோள தானிய உற்பத்தியில் வளரும் நாடுகள் 97 சதவீதப் பங்களிப்பும், இவற்றில் இந்தியா மொத்த பயிரிடும் பரப்பில் உலகளவில் முதலிடத்தையும் வகிக்கிறது. மேலும், இந்தியாவிலிருந்து கென்யா, சூடான் மற்றும் அரேபிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

அமெரிக்க வேளாண்துறை மூலங்களின்படி, 2013-14ல் இந்தியாவில் சோளம் 6.2 மில்லியன் எக்டரில் பயிரிடப்பட்டு 6 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. இது கடந்த ஆண்டைக்காட்டிலும் (2012-13) 5.08 சதவீத சாகுபடிப் பரப்பும், 9.09 சதவீத உற்பத்தியும் அதிகரித்துக் காணப்படுகிறது. மொத்த சோள தானிய உற்பத்தியில் மகாராஷ்டிரா 50 சதவீத பங்களிப்பும், கர்நாடகா, இராஜஸ்தான், மத்திய பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகியவை முக்கிய சோளம் பயிரிடும் பிற மாநிலங்களாகும்.

தமிழ்நாட்டில் சோளம், தானியம் மற்றும் தீவனத்திற்காக பயிரிடப்படுகிறது. திண்டுக்கல், கோயமுத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், கரூர் மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்கள் மொத்த சோள உற்பத்தியில் 76 சதவீதம் பங்களிக்கின்றன. திருப்பூர் மற்றும் கோவை மாவட்டங்களில் பாரம்பரிய விதை வகைகளான மஞ்சள் சோளம், விதையாக உயர்தர தீவனப்பயிர் விளைச்சலுக்கு பயன்படுத்தப்படுகிறது. வெள்ளைச் சோளம், கரிச்சோளம் மற்றும் காரடிச் சோளம் ஆகியவை தீவனத்திற்காகவும் மற்றும் மொட்டு வெள்ளைச் சோளம் உணவு

தானியத்திற்காகவும் பயிரிடப்படுகிறது. இரகங்கள் மற்றும் கலப்பினப் பயிர் வகைகளான கோ30, பி.எஸ்.ஆர்1 மற்றும் சி.எஸ்.ஹெச்5 ஆகியவை தீவனம், தீவனப்பயிர் மற்றும் பேக்கரி தயாரிப்பில் மூலப்பொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் சோளம், கரீப் (ஜூலை – அக்டோபர்), ரஃபி (அக்டோபர் - பிப்ரவரி) மற்றும் கோடை காலங்களில் பயிரிடப்படுகிறது.

விவசாயிகள் சந்தை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 11 ஆண்டுகளாக திருப்பூர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நிலவிய சோளத்தின் விலையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும், வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் ஆராய்ந்தது. நல்ல தரமான சோளத்தின் தற்போதைய விலை (மஞ்சள் சோளம், கரிச்சோளம் மற்றும் ரகங்கள்) ரூ.22 முதல் ரூ.25 வரையிலும் வெள்ளை மொட்டுச் சோளம் ரூ.30 - 35 வரையிலும் விற்கப்படுகிறது. இரண்டாம் தர சோளம் கிலோவிற்கு ரூ.19 முதல் ரூ.20 வரை திருப்பூர் சந்தையில் விற்கப்படுகிறது. நல்ல தரம் (கல், மண் மற்றும் தூசு நீக்கப்பட்டது) மற்றும் 9 சதவீதத்திற்கு குறைந்த ஈரப்பதமுள்ள சோள தானியம் விலையை நிர்ணயிக்கும் முக்கிய காரணியாக உள்ளது. அறுவடையான சோளத்தை தூய்மை செய்வதற்கு கிலோவிற்கு ரூ.0.85 வீதம் செலவாகிறது. விலை மற்றும் வர்த்தக ஆய்வுகளின் அடிப்படையில் தரமான சோளத்தின் விலை (அக்டோபர் - நவம்பர்) 2014ல் கிலோவிற்கு ரூ.20 - 21 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. மேலும், டிசம்பர் மாதத்தில் விலை உயர்வதற்கான வாய்ப்புகள் குறைவு. எனவே, விவசாயிகள் அறுவடை செய்த சோளத்தை உடனே விற்க பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள</u>


உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,<br>
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,<br>
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,<br>
கோயம்புத்தூர் - 641003.<br>
தொலைபேசி எண்: 0422-2431405


<u>தொழில்நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>


பேராசிரியர் மற்றும் தலைவர்,<br>
சிறு தானியங்கள் துறை,<br>
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,<br>
கோயம்புத்தூர் - 641 003.<br>
தொலைபேசி எண்: 0422-2450507


மக்கள் தொடர்பு அலுவலர்